**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.210/2024**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீதர் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 08th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் மலையன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் பக்கத்து ஊர்க்காரர்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் இந்த புகார் மனுவை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கொடுத்தேன். எதற்காக கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. நான் இந்த புகார் மனுவை விருப்பப்பட்டு கொடுக்கவில்லை. அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1.** இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 26.08.2023ம் தேதி, காலை 10.00 மணியளவில் கீழக்கலங்கலில் வசித்து வரும் முத்துராஜ் என்பவரை

பார்க்க சென்று கொண்டிருந்தபோது, பகல் 11.30 மணிக்கு எனது அண்ணன் மகன் வெங்கடேஷ் எனக்கு போன் மூலம் எங்கள் ஊரைச்சேர்ந்த கவிக்குயிலிடம் பேசிக்கொண்டிருந்தேன் என்றும், அப்போது அவரது கணவர் கனகராஜ் நான் தவறான நோக்கத்தில் அவரோடு பேசிக்கொண்டிருப்பதாக என நினைத்து என்னை கூட்டிச் சென்றார் என்று என்னிடம் கூறினார் என்றும், நான் உடனே அவரது அம்மா முத்துலட்சுமி மற்றும் சாட்சிகள் ராஜேஷ், கார்த்திக், மணிகண்டன் ஆகியோரை அழைத்துக்கொண்டு வெங்கடேஷ் சொன்ன இடமான கீழக்கலங்கல், சிவந்தி ஆதித்தனார் மண்டபம் எதிரேயுள்ள கவிக்குயில் வீட்டிற்கு மதியம் சுமார் 01.00 மணிக்கு சென்றேன் என்றும், அங்கு கவிக்குயிலின் வீட்டின் கீழ்ப்புறமுள்ள ஒரு மாமரத்தில் வெங்கடேஷை கயிற்றால் கட்டி, நகர விடாதபடி வைத்திருந்தார்கள் என்றும், எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது என்றும், அப்போது கவிக்குயிலின் அண்ணன் அன்பரசன் கையில் ஒரு அரிவாளுடனும், கவிக்குயிலின் கணவர் கனகராஜ் கையில் ஒரு அரிவாளுடனும், அவரது அப்பா நடராஜன் கையில் ஒரு அரிவாளுடனும் மற்றும் எதிரி முத்துமாரி என்பவரும் ஆக்ரோசமாக நின்றுகொண்டிருந்தார்கள் என்றும், அவர்களிடம் முத்துராஜை பார்க்க வந்ததாக கூறினோம் என்றும், அப்போது எதிரிகள் கெட்ட வார்த்தைகளால் பேசி, வெங்கடேஷின் மீது விரோதம் கொண்ட அன்பரசன் "என் தங்கச்சி வீட்டிற்கு எப்படி வரலாம், நீ உயிரோடு இருக்கக்கூடாது ல" என்று சொல்லி, அவர் கையில் வைத்திருந்த அரிவாளால், வெங்கடேஷின் கழுத்தை நோக்கி வெட்டினார் என்றும், அவர் இடது கையால் தடுத்ததில் அவருக்கு இடது கை பெருவிரலும், ஆள்காட்டி விரலும், நடுவிரலும் வெட்டுப்பட்டு, விரல்கள் துண்டானது என்றும், நாங்கள் தடுக்க போனபோது, எதிரிகள் கனகராஜீம், நடராஜனும் அரிவாளை வைத்து

எங்களை மறித்தார்கள் என்றும், மீண்டும் எதிரி அன்பரசன் அரிவாளைக் கொண்டு வெங்கடேஷின் இடது கை மணிக்கட்டில் வெட்டி மணிக்கட்டு பகுதியை துண்டாக வெட்டிப்போட்டு விட்டார் என்றும், எதிரி கனகராஜ் அரிவாளால் வெங்கடேஷின் இடது கண்ணில் ஓங்கி வெட்டினார் என்றும், அதில் அவரது இடது கண்ணிலிருந்து மூக்கு வரை பலத்த இரத்தக்காயங்கள் ஏற்பட்டது என்றும், எதிரி நடராஜன் அரிவாளால் வெங்கடேஷின் வலது பக்க தோள்பட்டையில் வெட்டி காயப்படுத்தினார் என்றும், தடுக்க சென்ற எங்களை அரிவாளைக் காட்டி கொன்று விடுவதாக மிரட்டினார்கள் என்றும், கயிற்றுடன் கட்டி வைத்திருந்த வெங்கடேஷை அவிழ்த்து, தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தோம் என்றும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஹைகிரவுண்ட் அரசு மருத்துவனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், கவிக்குயிலை தனியாக ஒரு ஆம்புலன்சில் சிகிச்சைக்காக கொண்டு வந்தார்கள் என்றும், அவர்கள் சிகிச்சையில் இருக்கும் போது, போலீசார் வந்து விசாரிக்க நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன் என்றும் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

C KATHIRAVAN
Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.05.12 15:55:01 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No.210/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 08th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கருத்தானூரில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். காயம்பட்ட பட்டியல் சாட்சி-11 வெங்கடேஷை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான் தனியார் ஆம்புலன்ஸ் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. காயம்பட்டவர்களை எனது ஆம்புலன்சில் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 26.08.2023ம் தேதி, பகல் 01.00 மணியளவில் கீழக்கலங்கல் சிவந்தி ஆதித்தனார் மண்டபம்

எதிரேயுள்ள கவிக்குயில் என்பவரது வீட்டிற்கு வந்தோம் என்றும், அப்போது அங்கு சாட்சி வெங்கடேஷை ஒரு மாமரத்தில் கட்டி வைத்திருந்தார்கள் என்றும், எதிரிகளான அன்பரசன், கனகராஜ், நடராஜன் ஆகியோர்கள் அரிவாளுடனும், எதிரி முத்துமாரியும் அங்கு இருந்தார் என்றும், சாட்சி வெங்கடேஷை சந்தேகப்பட்டு மாமரத்தில் கட்டி வைத்து, கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், எதிரி அன்பரசன் வெங்கடேஷின் இடதுபக்க கழுத்தை நோக்கி வெட்டினார் என்றும், அதை அவரது இடது கையால் தடுத்த போது, இடது கை பெருவிரல், ஆள்காட்டி விரல், நடுவிரல் ஆகியவை துண்டானது என்றும், மீண்டும் அன்பரசு அரிவாளால் வெங்கடேஷின் இடது கை மணிக்கட்டில் வெட்டி, இடது கை மணிக்கட்டு துண்டாக போனது என்றும், வெங்கடேஷின் இடது கண்ணில் வெட்டி பலத்த காயம் ஏற்பட்டது என்றும், எதிரி நடராஜன் அரிவாளால் வலது பக்க தோள்பட்டையில் வெட்டி காயப்படுத்தினார் என்றும், சம்பவத்தை பார்த்த நாங்கள் தடுக்க முற்பட்ட போது, கொன்று விடுவதாக மிரட்டினார்கள் என்றும், காயம்பட்ட வெங்கடேஷை கட்டி வைத்திருந்த கயிற்றிலிருந்து விடுவித்து எனது தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்தேன் என்றும் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.05.12 15:55:08 +0530